



# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®





ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 177 | உள்ளூர் - 26.06.2026 | வெள்ளி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 177 | வெளியூர் - 27.06.2026 | சனி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


**புதனின் சஞ்சாரம்..! வாழ்க்கையே மாறப் போகுது..!**

**கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவ நிறுவனத்தில் 27 காலியிடங்கள்!**

**தமிழக இடைத்தேர்தல்: தவெக வேட்பாளர்கள்?**

**பி.எப். பயனர்களுக்கு முக்கிய அறிவிப்பு..!**

# செஷல்ஸ் நாட்டுக்கு பயணமாகும் பிரதமர் மோடி..!

புதுடெல்லி, ஜூன். 26–

பிரதமர் நரேந்திர மோடி, இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் இந்தியாவின் முக்கிய கூட்டாளி நாடான செஷல்ஸ்நாட்டுக்கு ஜூன் 27 முதல் 29 வரை அரசுமுறைப் பயணம் மேற்கொள்கிறார். இதற்காக அவர் ஜூன் 26–ஆம் தேதி இந்தியாவில் இருந்து புறப்படுகிறார். செஷல்ஸ் அதிபர் டாக்டர் பேட்ரிக் ஹெர்மினி விடுத்த அழைப்பை ஏற்று மேற்கொள்ளப்படும் இந்தப் பயணத்தில், அந்நாட்டின் 50–வது தேசிய தின (Gold–en Jubilee) விழாவில் பிரதமர் மோடி சிறப்பு விருந்தினராக




கலந்து கொள்கிறார்.

இந்தப் பயணத்தின் போது, இரு நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு, கடல்சார் ஒத்துழைப்பு, பொருளாதாரம், வளர்ச்சி, வர்த்தகம், முதலீடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நடைபெற்று வரும் கூட்டுறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து உயர்மட்ட பேச்சுவார்த்தை நடைபெற உள்ளது. இந்தியப் பெருங்கடல் பகுதியில் பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவதிலும் இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

இதற்கு முன்பு, கடந்த பிப்ரவரி மாதம் செஷல்ஸ் அதிபர் இந்தியா வந்தபோது, இரு நாடுகளும் வளர்ச்சி, உள்கட்டமைப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் பல்வேறு ஒப்பந்தங்களை மேற்கொண்டன. அந்த ஒத்துழைப்பை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் முயற்சியாக பிரதமர் மோடியின் இந்தப் பயணம் பார்க்கப்படுகிறது.




தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் தலைமையில், சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தையொட்டி சென்னை, பேரறிஞர் அண்ணா நினைவிடம் அருகில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் நடைபெற்ற ஸ்டார்ட் RUN, ஸ்டாப் DRUGS போதைப்பொருள் எதிர்ப்பு ஓட்டம் தொடக்க நிகழ்ச்சியில் போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு அறிவிப்பு பலகையில் கையொப்பமிட்டு போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து போதைப்பொருள் எதிர்ப்பு ஓட்டத்தை கொடியசைத்து தொடங்கி வைத்து, அதில் பங்கேற்றார். இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் என். ஆனந்த், பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் பி. வெங்கடரமணன், நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் நெ. மரிய வில்சன், செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் ரா. குமார், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் மு. சாய்குமார், காவல்துறை தலைமை இயக்குநர் மகேஷ் குமார் அகர்வால், சென்னை மாநகர காவல் ஆணையர் டாக்டர் ஏ. அமல்ராஜ், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைச் செயலாளர் சந்தீப் நந்தூரி, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ். மாலதி ஹெலன் காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# விலை நிலையாகுமா?

# வர்த்தக சிலிண்டர் சப்ளை இயல்பு நிலைக்கு!

## மத்திய அரசு அதிரடி அறிவிப்பு!!

புதுடெல்லி, ஜூன். 26–

எப்போது ஈரானும் அமெரிக்காவும் இடையே போர் தொடங்கியதோ அதிலிருந்து நம் நாட்டில் பல விலை உயர்வுகள். அதிலும் கமர்சியல் சிலிண்டர் விலை ரூ.3,000–த்தைக் கடந்தது. இப்படி இருக்கையில் விலை இனிமேலும் ஏறுமா? இல்லை இறங்குமா? சிலிண்டர் சப்ளை சரியாக நடக்குமா? என்ற பதற்றத்திலேயே பல ஹோட்டல் உரிமையாளர்கள் இருந்து வந்தனர். அவர்கள் மட்டுமல்ல சில தொழிற்சாலைகளுக்கும் கமர்சியல் சிலிண்டர்கள் தேவைப்படுகின்றன.

ஆனால் சப்ளை குறைந்ததால் தொடர்ந்து சிலிண்டரின் விலை அதிகரித்தது. தற்போது ஹோட்டல் உரிமையாளர்களுக்கும், தொழிற்சாலை உரிமையாளர்களுக்கும் நிவாரணம் அளிக்கும் வகையில் மத்திய அரசு செய்தி ஒன்றை வெளியிட்டிருக்கிறது. கேஸ் சிலிண்டரின் விநியோகத்திற்கு அரசு விதித்திருந்த கட்டுப்பாடுகளை அதிரடியாக நீக்கியுள்ளது. போருக்கு முன்பு எப்படி சிலிண்டர் சப்ளை கிடைத்ததோ அதே போல தங்கு தடையின்றி சிலிண்டர் பெறலாம் என்று மத்திய பெட்ரோலிய அமைச்சகம் அதிரடி உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

**பிரச்சனைக்குக் காரணம் என்ன?:**

அமெரிக்காவும் இஸ்ரேலும்




இணைந்து ஈரான் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தியது. அதற்காக ஈரானும் பதிலடி தாக்குதலை நடத்தியது. இப்போது அமெரிக்காவும் ஈரானும் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இதனால் கேஸ் வரத்து மீண்டும் சீராக வரத் தொடங்கியுள்ளது. இதன் காரணமாகவே தற்போது அரசு கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளது.

இனி எப்பொழுதும் போல கமர்சியல் சிலிண்டர்கள் தங்கு தடையின்றி கிடைக்கும். தொழிற்சாலைகள் இனி எல்பிஜி கேஸ் பயன்படுத்தும் போது முன்பை போலவே 50 சதவீதம் வரை சப்ளை செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவை அனைத்து மாநிலம் மற்றும் யூனியன் பிரதேச அரசும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காக மத்திய அமைச்சகம் கடிதம் ஒன்றையும் எழுதி இருக்கிறது. சரி கமர்சியல் மற்றும் தொழிற்சாலைகளுக்கு சிலிண்டர் சப்ளை அதிகரித்தால் வீட்டில் பயன்படுத்தப்படும் சிலிண்டர் சப்ளை குறையுமா? என்ற பயம் உங்களுக்கு ஏற்படலாம். ஆனால் இதையும் சீராக வழங்க அரசு உறுதி அளித்தியுள்ளது.

சப்ளை குறைந்ததால் இந்தியாவில் எல்பிஜி விலையும் அதிகரித்தது. மார்ச் மாதத்தில் வீட்டு உபயோக சிலிண்டரின் விலை ரூ.60 உயர்த்தப்பட்டது. ஜூன் மாதம் ரூ.29 உயர்த்தப்பட்டது. இதனால் வீட்டில் பயன்படுத்தப்படும் எல்பிஜி சிலிண்டரின் விலை ரூ.942–ஐ எட்டியது. உணவகங்கள் மற்றும் வணிக ரீதியான கமர்சியல் சிலிண்டரின் விலை மே மாதத்தில் மட்டும் 1,000 ரூபாய் உயர்த்தப்பட்டது. இதனால் 19 கிலோ எடையுள்ள கமர்ஷியல் சிலிண்டர் 3.113 ரூபாயாக இருக்கிறது. மீண்டும் சிலிண்டர் வரத்து சரியாக தொடங்கியுள்ளது. இனிவரும் காலங்களில் ஏற்கனவே உயர்த்தப்பட்ட விலை குறையுமா? அல்லது மீண்டும் அதிகரிக்குமா? என்ற விபரங்கள் தெரியவரும்.




# போலியோ சொட்டு மருந்து முகாமை தொடங்கி வைக்கும் முதல்வர் விஜய்..!

சென்னை, ஜூன். 26–

முதல்வர் விஜய் வரும் ஞாயிற்றுக் கிழமை (ஜூன் 28) போலியோ சொட்டு மருந்து முகாமை பாலவாக்கம் ஆதி திராவிட பள்ளியில் தொடங்கி வைக்கிறார். பிறந்த குழந்தை முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கப்படுகிறது. வெளியூர் சென்றாலும் அருகில் உள்ள மையங்களில் சொட்டு மருந்து போட்டுக்கொள்ளலாம்

# பார்ட்டி பண்ட் குறித்து முழுவீச்சில் தகவல் சேகரிப்பு!

சென்னை, ஜூன். 26–

சமீபத்தில் நடந்த சட்டசபை கூட்டத்தில் பேசிய முதல்வர் விஜயும், ‘டாஸ்மாக் வாயிலாக பார்ட்டி பண்ட் வசூலிக்கப்பட்டது’ என, தெரிவித்தார். இதற்கு எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி உள்ளிட்ட தி.மு.க., – எம்.எல்.ஏ.,க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

மேலும், ‘எந்த கட்சி வாயிலாக வசூலிக்கப்பட்டது என, ஆதாரத்துடன் நிரூபிக்க தயாரா’ எனவும், உதயநிதி கேள்வி எழுப்பினார். அடுத்த சட்டசபை கூட்டம், பட்ஜெட் தாக்கலுடன் ஜூலை இரண்டாவது வாரத்தில் தொடங்க உள்ளது. அப்போது, கட்சி நிதி வசூல் குறித்த முழு விபரங்களையும் அம்பலப்படுத்த, முதல்வர் முடிவெடுத்துள்ளார். அதனால், கட்சி



நிதி வசூல் விபரங்களை சேகரிக்கும்படி அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும், முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

# வெனிசுலா நிலநடுக்கம்: பலி - 235 காயம்- 4300!

வெனிசுலா, ஜூன். 26–

வெனிசுலா நாட்டில் நேற்று அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 235ஆக அதிகரித்துள்ளது. மேலும் 4300 பேர் காயம் அடைந்துள்ளனர். மீட்பு பணிகள் முழு வீச்சில் நடக்கிறது. தென் அமெரிக்க நாடான வெனிசுலாவின் தலைநகர் கராகசுக்கு மேற்கே, 160 கி.மீ., தொலைவில் உள்ள மொரோன் கடற்கரை பகுதிக்கு அருகில், 39 வினாடி இடைவெளியில் அடுத்தடுத்து இரண்டு நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. முதல் நிலநடுக்கம் 7.2 ரிக்டர் அளவுக்கு, தரையில் இருந்து 26 கி.மீ., ஆழத்தில் ஏற்பட்டது. இரண்டாவது நிலநடுக்கம் 7.5 ரிக்டர் அளவுக்கு, 10 கி.மீ., ஆழத்தில் பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

அடுத்தடுத்து ஏற்பட்ட இந்த இரட்டை நிலநடுக்கத்தால், நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் நூற்றுக்கணக்கான கட்டடங்கள் இடிந்து விழுந்தன. பல இடங்களில் சாலைகளில் வெடிப்புகள் ஏற்பட்டு பிளந்து ள்ளன. தலைநகர் கராகசை ஒட்டியுள்ள லா குவைரா பகுதி மிக மோசமாக பாதிப்படைந்துள்ளதால், அது,



‘பேரிடர் மண்டலமாக’ அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் மட்டும் அதிகளவிலான கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ளன.கராகசின் அல்டமிரா பகுதியில், 22 மாடிகளை கொண்ட பெரிய கட்டடம் ஒன்று இடிந்து விழுந்து முற்றிலும் தரைமட்டமாகியுள்ளது.

நிலநடுக்கங்களால் இதுவரை 235 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 4300 பேர் காயம் அடைந்துள்ளனர். மீட்பு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. பல அடுக்குமாடி குடியிருப்புகள் இடிந்து விழுந்துள்ளதால், பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. வெனிசுலாவின் முதன்மையான விமான நிலையமான சைமன் பொலிவர் சர்வதேச விமான நிலையம் கடுமையாக சேதமடை ந்ததையடுத்து மூடப்பட்டுள்ளது.

**பெற்றோர்களே அலர்ட்!**

**ஜூன் 28 ஞாயிறன்று போலியோ சொட்டு மருந்து முகாம்:**

**உங்க குழந்தைக்கு மறக்காம போடுங்க!**



மதுரை மணி
தலையங்கம்
வெள்ளிக்கிழமை 26.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 12-ம் தேதி

# தங்கம் விக்கிற விலைக்கு.. டிரெண்டாகும் புது கலாச்சாரம்!




2025–ஆம் ஆண்டு மே மாதம் வரை 1 கிராம் தங்கம் ரூ.8000–த்திற்குள் விற்பனையானது. ஆனால் 2026–ஆம் ஆண்டில் ரூ.15,000–த்தை கடந்து விற்பனை செய்யப்பட்டது. இப்படியே விலை ஏற்றமும் இறக்கமுமாகத் தான் இருந்து வருகிறது. இதனால் நகை பிரியர்கள் புதிய நகைகளை யோசித்து வாங்கத் தொடங்கியுள்ளனர். மாறாக நகைக்கடைகளில் ஒரு புதிய ட்ரெண்ட் உருவாகியுள்ளது.

அது வேறொன்றுமில்லை.. மக்கள் பழைய நகையை கொடுத்து புதிய நகைகளாக மாற்றும் வழக்கம் அதிகரிக்க தொடங்கியுள்ளது. சந்தை நிலவரங்களை எல்லாம் வைத்துப் பார்க்கும்போது பழைய நகைகளை எக்ஸ்சேஞ் செய்து புதிய நகைகளாக வாங்குவோரின் எண்ணிக்கை 60 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாக அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. தொடர் விலை உயர்வால் மந்தமாக இருந்த நகை வியாபாரத்தை உண்மையிலேயே இந்த எக்ஸ்சேஞ் ஆஃபர் மாற்றி அமைத்திருக்கிறது.


தற்போது மக்கள் பழைய தங்கத்தை கொடுத்து புதிய டிசைன்களாக வாங்க தொடங்கியுள்ளனர். இது ஒரு வகையில் வெளிநாடுகளில் இருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படும் தங்கத்தின் அளவை வெகுவாக குறைக்கும். நாட்டின் வர்த்தக பற்றாக்குறையை கட்டுப்படுத்தவும் அரசுக்கு உதவியாக இருக்கும். மேலும் நகையை எக்சேஞ்ச் செய்பவர்களுக்கு எச்சரிக்கையும் உண்டு அது என்னவென்றால்,நகைகளை மாற்றும் போது நகைக்கடைக்காரரின் நம்பகத்தன்மையை மக்கள் உறுதி செய்ய வேண்டும். விலையில் வெளிப்படை தன்மை இருக்கும் பட்சத்தில் அந்த கடைகளில் மட்டுமே எக்ஸ்சேஞ் செய்ய வேண்டும். அப்போதுதான் நம் பழைய தங்கத்திற்கான உண்மையான மதிப்பு கிடைக்கும் .

**அதிகம் எக்சேஞ்ச் செய்வது யார்?:**

தற்போதைய சூழலில் தங்களுடைய பழைய நகைகளை அதிகம் எக்சேஞ் செய்பவர்களில் 35 வயதை கடந்த நடுத்தர வர்க்கத்தினர் அதிகமாக இருப்பதாகத் தெரியவந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளாக நகையை வாங்கி அதை வீட்டு லாக்கரிலோ அல்லது பீரோவிலோ பூட்டி வைத்து வந்த மக்கள், இப்போது புதிய டிரெண்டுக்கு மாறி தங்களுடைய பழைய நகைகளை மாற்றி வருகின்றனர்.



தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் முன்னாள் படைவீரர்கள் நலத்துறையின் சார்பில் நடைபெற்ற முன்னாள் படைவீரர்களுக்கான தொழில்முனைவோர் கருத்தரங்கம் நிகழ்ச்சியில் 29 பயனாளிகளுக்கு ரூ.4.45 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



## சினிமா துளிகள்..!

# கோவாவில் நடைபெற்ற சுந்தர்.சி - குஷ்பு மகள் திருமணம்!



பிரபல இயக்குனரும் நடிகருமான சுந்தர்.சி– குஷ்பு தம்பதியினருக்கு அவந்திகா, அனந்திதா என்ற இரு மகள்கள் உள்ளனர்.இதில் மூத்த மூத்த மகள் அவந்திகாவுக்கும், ஷ்ரவன் சீனிவாசனுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது... இதைத்தொடர்ந்து குஷ்பு மகள், அவந்திகா– ஷ்ரவன் திருமணம் கோவாவில் உள்ள ரிசார்ட்டில் 25.06.2026 காலை நடந்தது.... ராதிகா சரத்குமார், சுகாசினி மணிரத்னம், பூர்ணிமா பாக்யராஜ், திரிஷா, சுஜாதா விஜயகுமார்,நடன இயக்குனர் பிருந்தா உள்பட திரை உலக பிரபலங்கள் பலர் நேரில் வாழ்த்தியுள்ளனர்.

# தமிழக இடைத்தேர்தல்: தவெக வேட்பாளர்கள்?




சென்னை, ஜூன். 26–

தமிழகத்தில் ஒட்டு மொத்தமாக காலியாக உள்ள 6 தொகுதிகளுக்கும் விரை விலேயே இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. இதில் ஆளுங்கட்சியான தவெக சார்பில் களமிறங்கப்போகும் வேட்பாளர்கள் யார் என்பது மிகப்பெரிய எதிர்பார்ப்பாக உள்ளது.

**தவெகவின் 6 வேட்பாளர்கள் யார்?**

இடைத்தேர்தலில் போட்டியிட ஆரம்பம் முதலே கட்சிக்காக உழைத்து வரும் நிர்வாகிகளுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என ஒரு தரப்பு வலியுறுத்தி வருகிறதாம். உங்களை நம்பி பதவியை ராஜினாமா செய்து வந்த எங்களுக்கே மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என அதிமுக மாஜிக்கள் கோரிக்கை விடுக்கின்றனராம். ஆனால், கள ஆய்வுகள் முடிவில் யாருக்கு சாதகமான சூழல் உள்ளதோ அவர்களுக்கு தான் இறுதி வாய்ப்பு என தவெக தலைமை ஏற்கனவே திட்டவட்டமாக தெரிவித்து விட்டதாம். அந்த வகையில் பெரும்பாலான அதிமுக மாஜிக்களுக்கு வாய்ப்பில்லை என்றே கூறப்படுகிறது. அப்படி வாய்ப்பு பெறாத வர்களுக்கு இடைத்தேர்தலுக்குப் பிறகு ஏதேனும் வாரியத் தலைவர் பதவியை வழங்க ஆளுங்கட்சி பரிசீலிக்கிறதாம்.

**வேட்பாளராக மல்லுக்கட்டும் நிர்வாகிகள்**

திருச்சி கிழக்கு: முதலமைச்சர் விஜய் களமிறங்கி வெற்றி பெற்ற திருச்சி கிழக்கு தொகுதியில் நடிகர் ராகவா லாரன்ஸ் களமிறங்குவது கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளது. ஒருவேளை அவரது பெயர் வேட்பாளர் பட்டியலில் இடம்பெற விட்டால், அக்கட்சியின் மூத்த நிர்வாகிகளில் ஒருவரான கு. ப. கிருஷ்ணனின் மகன் சிரஞ்சீவி களமிறக்கப்படலாம் என கூறப்படுகிறது. இவர் தான் அந்த தொகுதி பொதுதேர்தலின் போது விஜய்க்கான பேக்–அப் வேட்பாளராக களமிறங்கியது குறிப்பிடத்தக்கது.

பெருந்துறை: இந்த தொகுதியில் பொதுத்தேர்தலின் போது தவெக சார்பில் களமிறங்கி வெற்றி வாய்ப்பை இழந்த அருணாசலம் மீண்டும் களமிறக்கப்பட உள்ளாராம். இவர் அமைச்சர் செங்கோட்டையனுக்கு நெருக்கமானவர் என கூறப்படுகிறது. இதுபோக எம்.எல்.ஏ., பதவியை ராஜினாமா செய்த ஜெயக்குமார் மற்றும் தவெகவின் ஈரோடு கிழக்கு மாவட்ட செயலாளர் வெங்கடேஷ் ஆகிய இருவரும் வாய்ப்பினை பெற தீவிரமாக முயன்று வருகின்றனராம்.

**தாராபுரம்:** தவெகவின் கவுரி சித்ரா மற்றும் பதவியை ராஜினாமா செய்து அதிமுகவில் இணைந்த சத்யபாமா இடையே இடைத்தேர்தலுக்கான வய்ப்பினை பெறுவதில் கடும் போட்டி நிலவுகிறதாம்.

**அம்பாசமுத்திரம்:** பதவியை ராஜினாமா செய்த இசக்கி சுப்பையாவிற்கு எதிரான சூழல் களத்தில் நிலவுவதாக கூறப்படுகிறது. இதனால் அவருக்கு வாய்ப்பளிக்க தவெக தலைமை தயங்குகிறதாம். மேலும் நெல்லை தெற்கு மாவட்ட செயலாளர் ராஜகோ பால் அல்லது கிழக்கு மாவட்ட செயலாளர் ஜாகிர் உசேன் ஆகிய இருவரில் ஒருவர் வேட்பாளராக களமிறங்கவும் வாய்ப்பு உள்ளதாம்.

**மதுராந்தகம் யாருக்கு?**

சட்டமன்ற பொதுத்தேர்தலில் மதுராந்தகம் தொகுதியில் விசிக சார்பில் களமிறங்கிய முன்னாள் மத்திய அமைச்சர் தலித் எழில்மலையின் மகள் எழில் கேத்தரின் தோல்வியை தழுவினார். ஆனால், தற்போது மீண்டும் தங்களுக்கு அந்த தொகுதியை இடைத்தேர்தலில் ஒதுக்க வேண்டும் என தவெகவிடம் கோரிக்கை வைத்து வருகிறதாம். அதேநேரம், அதிமுக சார்பில் வென்று பதவியை ராஜினாமா செய்த, மரகதம் மீண்டும் போட்டியிட வாய்ப்பு கோரி வருகிறாராம். இதனால் சட்டப்பேரவையில் பெரும்பா ன்மையை பெற விரும்பும் தவெக, கூட்டணி கட்சிக்கு இந்த தொகுதியை ஒது க்குமா? என்பதை பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும்.

**விராலிமலை நிலவரம் என்ன?**

தவெகவில் இணைந்தால் மீண்டும் விராலிமலையில் களமிறங்க விஜயபாஸ்கருக்கு வாய்ப்புள்ளதாகவே கூறப்படுகிறது. அதேநேரம், அவரல தனக்கு நெருக்கடி ஏற்படக்கூடும் என அமைச்சரும், புதுக்கோட்டை மாவட்ட செயலாளருமான முகமது பர்வேஸ் கருதுகிறாராம். இதனால் விஜய்பாஸ்கருக்கு எதிராக உள்ள வழக்குகளை குறிப்பிட்டு, அவருக்கு வாய்ப்பு வழங்க வேண்டாம் என வலியுறுத்தி வருகிறாராம்.

**எதிர்க்கட்சிகளை சமாளிக்குமா தவெக?**

இடைத்தேர்தல் மூலம் தனிப்பெரும்பான்மை பெற முடியாது என்றாலும், பொதுவெளியில் நேர் எதிரான கருத்துகளை கூறி வரும் சில ஆதரவு கட்சிகளை நம்பி இருக்க வேண்டிய சூழலை தவிர்க்க தவெக விரும்புகிறதாம். இதற்காக வெற்றியை மிகவும் தீவிரமாக எதிர்பார்க்கிறதாம். அதேநேரம், விஜயின் மாஸ் பிம்பத்தை உடைக்க இடைத்தேர்தலில் வெற்றி பெற்றாக வேண்டும் என எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளனவாம். குறிப்பாக அதிமுக மற்றும் நாதக உடன் சில திரைமறைவு உடன்படிக்கைகளை ஏற்படுத்தி, குறிப்பிட்ட தொகுதிகளில் எதிர் வேட்பாளர்களை நிறுத்தாமல் களமிறங்கவும் திமுக தயாராகி வருகிறதாம்.

# ‘ஒன்றிய அரசு’ அல்ல ‘இந்திய அரசு’ முதல்வர் விஜய்!



சென்னை, ஜூன். 26–

‘என்.எல்.சி., பங்கு விற்பனையை மறுபரிசீலனை செய்ய வேண்டும்’ என பிரதமருக்கு முதல்வர் விஜய் கடிதம் எழுதியுள்ளார். முந்தைய திமுக அரசு பயன்படுத்திய ஒன்றிய அரசு என்ற தவறான வார்த்தை பிரயோகத்தை கைவிட்டு, இந்திய அரசு என்று கடிதத்தில் முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

முந்தைய திமுக அரசு, மத்திய அரசுடன் பல்வேறு வகையில் மோதல் போக்கை கொண்டிருந்தது. எதற்கெடுத்தாலும் மத்திய அரசை குறை கூறுவது, மத்திய அரசு என்ன செய்தாலும் எதிர்ப்பு தெரிவிப்பது என நிலைப்பாடுகளை எடுப்பது திமுகவுக்கு வழக்கமாக இருந்தது. மத்திய அரசை, ஒன்றிய அரசு என்று குறிப்பிட்டு வந்ததும், திமுக வேண்டுமென்றே உருவாக்கிய விவகாரம் தான்.

மத்திய அரசையும், பிரதமர் மோடியையும் சிறுமைப் படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில், திமுக இவ்வாறு செய்தது. அதைப் பின்பற்றி திமுக ஆதரவு ஜால்ரா ஊடகங்களும், கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களும், ஒன்றிய அரசு என்றே கூவிக் கொண்டிருந்தனர்.

இத்தகைய தவறுக்கு நேற்று பிரதமர் மோடிக்கு முதல்வர் விஜய் எழுதியுள்ள கடிதத்தில் முற்றுப்புள்ளி வைத்துள்ளார். அந்த கடிதத்தில், ஒன்றிய அரசு என்ற வார்த்தைகளை தவிர்த்து இந்திய அரசு என்று முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

அவரது கடிதம்: என்.எல்.சி., இந்தியா நிறுவனத்தின் பங்குகளை சலுகை வாயிலாக விற்பனை செய்ய, இந்திய அரசு எடுத்துள்ள முடிவு, தமிழக அரசிற்கு வருத்தத்தை அளித்துள்ளது. என்.எல்.சி., நிறுவனத்தின் பங்குகளை குறைக்கும் எந்தவொரு முடிவையும், தமிழக அரசு கொள்கை ரீதியாக ஆட்சேபிக்கிறது.

அதன் பங்குகளை விற்பது, தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தி விடும். எனவே, தன் முடிவை இந்திய அரசு மறுபரி சீலனை செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**தொடரட்டும் இந்த மாற்றம்**

மத்தியில் பாஜ ஆட்சி செய்கிறது என்பதற்காகவே, இந்திய அரசை சிறுமைப்படுத்த திமுக முயற்சித்தது. திமுகவின் நோக்கம், ஒன்றிய அரசு என்ற அந்த வார்த்தையின் உள் அர்த்தம் தெரியாமல் தமிழக வெற்றி கழகத்தில் சிலரும் அவ்வாறே கூறிவந்தனர். முதல்வராக விஜய் பொறுப்பேற்ற பிறகும், தி.மு.க., ஆட்சியை பின்பற்றி, அரசு அறிக்கைகளிலும், மத்திய அரசை, ‘ஒன்றிய அரசு’ என்றே குறிப்பிட்டு வந்தனர்.

இத்தகைய சூழ்நிலையில் தான், நேற்றைய முதல்வரின் கடிதத்தில், இந்திய அரசு என்ற வார்த்தை பிரயோகம் இடம்பெற்றுள்ளது. இதன் மூலம், மக்கள் மனதில் தவறான வார்த்தையை பதிய வைக்க முற்பட்ட திமுக திராவிட மாடலின் தீய நோக்கத்துக்கு த.வெ.க., அரசு முடிவு கட்டி உள்ளது. இதை முதல்வர் விஜய் தலைமையிலான அரசு தொடர வேண்டும் என்பதே தேசபக்தர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.




மதுரை மாவட்டம், டாக்டர்.எம்.ஜி.ஆர். விளையாட்டு அரங்கம் வளாகத்தில் இருந்து சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு போதைப்பொருள் இல்லா தமிழ்நாடு என்ற உயரிய இலக்கினை விலியுறுத்தும் வகையில் START RUN–STOP DRUGS/ANTI DRUG RUN –2026 என்ற விழிப்புணர்வு உறுதிமொழி மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் அ.கல்லாணை, மதுரை கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் சோ.கார்த்திகேயன், மாநகராட்சி மேயர்(பொ)– துணை மேயர் நாகராஜன் ஆகியோர் தலைமையில் பொது மக்கள் மற்றும் மாணவ–மாணவிகள் எடுத்துக் கொண்டனர்.

# பி.எப். பயனர்களுக்கு முக்கிய அறிவிப்பு..!




புதுடெல்லி, ஜூன். 26–

நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் பலருக்கும் பிபிஎஃப் (PPF) கணக்கு இருப்பது வழக்கம். அப்படியென்றால் இது உங்களுக்கான செய்தி. தனது இணையதளத்தில் சில முக்கிய சேவைகளை மூன்று நாட்களுக்கு நிறுத்தப்போவதாக இபிஎஃப்ஓ அறிவித்துள்ளது.

மென்பொருள் மற்றும் தரவுத்தளத்தை மேம்படுத்தும் பணிகளுக்காகவே இந்தத் தற்காலிகச் சேவை முடக்கம் மேற்கொள்ளப்படுகிறது. தகவல்களின்படி, ஜூன் 26 நள்ளிரவு முதல் ஜூன் 28 இரவு 11:59 மணி வரை, பிஎஃப் கோரிக்கைகள் (claims) தொடர்பான சேவைகள் இபிஎஃப்ஓ இணையதளத்தில் கிடைக்காது. ஜூன் 29 முதல் அனைத்து சேவைகளும் வழக்கம்போலவும், இன்னும் வேகமாகவும் செயல்படும் என்று நிறுவனம் தெரிவித்துள்ளது.



# புதனின் சஞ்சாரம்..! வாழ்க்கையே மாறப் போகுது..!




ஜூன் 23 முதல் ஆகஸ்ட் 23 வரை புதன் கிரகம் மிதுனம் மற்றும் கடக ராசிகளுக்கு இடையே மாறி மாறி சஞ்சரிக்கவுள்ளது. இதனால் ரிஷபம், மிதுனம், கன்னி, துலாம், மகரம் மற்றும் கும்ப ராசிக்காரர்களின் தொழில், நிதி நிலைமை, வேலை, வியாபாரம் மற்றும் வருமானத்தில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. சிலருக்கு ராஜ யோகம் மற்றும் தன யோகம் கிடைக்கலாம் என்றாலும், மற்றவர்கள் இந்தப் பெயர்ச்சிக் காலத்தில் நிதி முடிவுகளை எடுப்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

புத்திசாலித்தனத்திற்கு அதிபதியான புதன், ஆகஸ்ட் 23 வரை மிதுனம் மற்றும் கடக ராசிகளுக்கு இடையே சஞ்சரிக்கிறார். ஜூன் 23 அன்று மிதுனத்திலிருந்து கடக ராசிக்குள் நுழைந்த புதன், ஜூலை 2 அன்று அந்த ராசியில் சஞ்சரித்து, 7–ஆம் தேதி மீண்டும் மிதுன ராசிக்குத் திரும்புவார். அதன்பிறகு, ஆகஸ்ட் 7 அன்று கடக ராசிக்குள் நுழைந்து ஆகஸ்ட் 23 வரை அங்கேயே இருப்பார். புதனின் இந்தப் பெயர்ச்சியால் ரிஷபம், மிதுனம், கன்னி, துலாம், மகரம் மற்றும் கும்ப ராசிக்காரர்களின் அதிர்ஷ்டத்தில் பெரிய மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

**ரிஷபம்:** இந்த ராசிக்கு மிகவும் சாதகமான கிரகமான புதன், தனது சொந்த வீடான மிதுனத்தில் இருக்கும் வரை, வருமானம் அதிகரிக்கும். பெரும்பாலான நிதி மற்றும் தனிப்பட்ட பிரச்சனைகள் தீர்க்கப்படும். சொல் மற்றும் செயல்களுக்கு மதிப்பு கூடும். சொத்து மற்றும் நிதி விவகாரங்கள் மேம்படும். இருப்பினும், அது மூன்றாம் வீடான கடக ராசிக்குள் நுழையும்போது, வருமானத்தை அதிகரிக்கும் திட்டங்கள் தலைகீழாக மாறக்கூடும். நிதி விஷயங்களில் எவ்வளவு கவனமாக இருக்கிறீர்களோ, அவ்வளவு நல்லது.

**மிதுனம்:** ராசிக்கு அதிபதியான புதன் இந்த ராசியில் இருந்து தன ஸ்தானத்திற்கு (செல்வ ஸ்தானத்திற்கு) செல்லும்போது, ராஜ யோகம் மற்றும் தன யோகம் நிச்சயமாக உண்டாகும். வேலையில் பதவி உயர்வு கிடைக்கும். உங்கள் தொழில் மற்றும் வியாபாரம் புதிய உயரங்களை எட்டும். பங்குகள் மற்றும் ஊக வணிகம் (speculation) மூலம் அபரிமிதமான லாபம் கிடைக்கும். பெரும்பாலான நிதி மற்றும் தனிப்பட்ட பிரச்சனைகள் தீர்க்கப்படும். சொல் மற்றும் செயல்களுக்கு மதிப்பு கூடும். இருப்பினும், கடக ராசியில் சஞ்சரிக்கும்போது பண இழப்பு மற்றும் ஏமாற்றங்கள் ஏற்படலாம்.

**கன்னி:** ராசிக்கு அதிபதியான புதன் பத்தாம் வீட்டில் சஞ்சரிப்பது நிச்சயமாக ராஜ யோகத்தை உருவாக்கும். வேலையில் பதவி உயர்வு கிடைக்கும். பணியிடத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும். தொழில் மற்றும் வியாபாரம் சிறப்பாக அமையும். லாபகரமான கடக ராசிக்குள் நுழையும்போது, அதிக நிதி ஆதாயங்கள் கிடைக்கும். பங்குச் சந்தை மற்றும் ஊக வணிகம் (speculations) மூலம் நல்ல லாபம் கிடைக்கும். புதன் கிரகம் வக்ர கதியில் (பின்னோக்கி) செல்லும்போது, வருமானத்தை அதிகரிக்கும் முயற்சிகளில் ஈடுபடாமல் இருப்பது நல்லது.

**துலாம்:** புதன் கிரகம் இந்த ராசிக்கு அதிர்ஷ்டமான ராசியான மிதுனத்தில் சஞ்சரிக்கும்போது, இவர்களுக்குப் பல வழிகளில் வருமானம் கிடைக்கும்; வேலைவாய்ப்பு ரீதியாகவும் அதிர்ஷ்டம் கூடிவரும். தொழில் மற்றும் வியாபாரத்தில் செயல்பாடுகள் கணிசமாக அதிகரிக்கும். பணியில் இருப்பவர்களுக்கும் வேலை தேடுபவர்களுக்கும் வெளிநாட்டு வாய்ப்புகள் கிடைக்கும். வேலை நிமித்தமாக வெளிநாடு செல்லும் வாய்ப்பு அமையும். இருப்பினும், புதன் கடக ராசிக்கு மாறும்போது, தொழில் மற்றும் வேலையில் நிலைமை தலைகீழாக மாற வாய்ப்புள்ளது. மகரம்: புதன் இந்த ராசியின் ஆறாம் வீடான மிதுனத்தில் சஞ்சரிக்கும்போது, இவர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கும், ஆனால் அதற்கேற்ற பலன் கிடைக்காது.

வருமானத்தை அதிகரிக்கும் முயற்சிகள் சற்று மந்தமடையும். நிதிச் சிக்கல்களிலிருந்து மீள்வது கடினமாக இருக்கும். சில உடல்நலப் பிரச்சினைகளும் தொல்லை தரலாம். தொழில் மற்றும் வியாபாரத்தில் போட்டியாளர்களால் சிக்கல்கள் ஏற்படலாம். அதன்பிறகு, புதன் கடக ராசிக்குச் செல்லும்போது வருமானம் கணிசமாக உயரும்; வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் நேர்மறையான மாற்றங்கள் ஏற்படும்.

**கும்பம்:** புதன் இந்த ராசியின் ஐந்தாம் வீட்டில் சஞ்சரிக்கும் வரை, வருமானம் மற்றும் உடல்நலம் சார்ந்த எந்தப் பிரச்சினையும் இருக்காது. பங்குச் சந்தை மற்றும் ஊக வணிகம் மூலம் நல்ல லாபம் கிடைக்கும். திறன்கள் மேம்படும். பணியில் கிடைக்கும் பதவி உயர்வு, இவர்களின் திறமைக்கான அங்கீகாரமாக அமையும். தொழில் மற்றும் வியாபாரம் லாபகரமாக இருக்கும். இருப்பினும், புதன் கடக ராசிக்கு மாறும்போது, வருமானத்தை மீறிய செலவுகள், பண இழப்பு மற்றும் ஏமாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

# 11, 12-ம் வகுப்புகளுக்கான துணைத்தேர்வு தேதிகள் வெளியீடு!

சென்னை, ஜூன். 26–

தமிழகத்தில் 10, 11 மற்றும் 12–ஆம் வகுப்பு மாணவர்களுக்கான துணைத்தேர்வு அட்டவணையை அரசுத் தேர்வுகள் இயக்ககம் வெளியிட்டுள்ளது.

10, 11 மற்றும் 12–ஆம் வகுப்பு துணைத்தேர்வு விவரங்கள்

12–ஆம் வகுப்பு (+2) துணைத்தேர்வு தேர்வு நடைபெறும் நாட்கள்: ஜூன் 29 முதல் ஜூலை 7 வரை நடைபெறும்.

11–ஆம் வகுப்பு துணைத்தேர்வு: ஜூலை 8 முதல் ஜூலை 16 வரை நடைபெறும்.

10–ஆம் வகுப்பு மறுதேர்வுகள் ஜூலை 8 முதல் ஜூலை 15 வரையும் நடைபெறுகின்றன.

தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகள் (Hall tick–ets) அரசுத் தேர்வுகள் இயக்ககம் (DGE) இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

ஹால் டிக்கெட்: டி.ஜி.இ (DGE) இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.




## உடலில் தென்படும் இந்த 7 அறிகுறிகளைப் புறக்கணிக்காதீங்க..!




கல்லீரல் சிரோசிஸ் (Liver Cirrhosis) அறிகுறிகள்: கல்லீரல் சிரோசிஸ் என்பது ஒரு தீவிரமான நோயாகும்; இதில் ஆரோக்கியமான கல்லீரல் செல்கள் படிப்படியாக வடு திசுக்க ளால் (scar tissue) மாற்றப்பட்டு, கல்லீரலின் இயல்பான செயல்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. பெரும்பாலும், இந்நோய் உடலை மிகவும் அமைதியாகவே பாதிக்கிறது. கல்லீரல் கடுமையாகப் பாதிக்கப்படும் வரை இதன் அறிகுறிகள் வெளியே தெரியாமல் இருக்கலாம்.

**தோல் மற்றும் கண்கள் மஞ்சள் நிறமாதல் (மஞ்சள் காமாலை):**

இது சிரோசிஸின் முக்கிய அறிகுறிகளில் ஒன்றாகும். கல்லீரலால் 'பிலிரூபின்' (bilirubin) எனும் பொருளைச் சரியாகச் செயலாக்க முடியாதபோது, அது இரத்தத்தில் சேர்ந்து தோல் மற்றும் கண்களை மஞ்சள் நிறமாக மாற்றுகிறது. இதனுடன், தோலுக்கு அடியில் பித்த நீர் (bile) சேர்வதால் கடுமையான அரிப்பும் ஏற்படலாம். இது இரவில் இன்னும் தீவிரமாக இருக்கலாம்.

**தோலில் திடீர் நீல நிறத் தழும்புகள் அல்லது புள்ளிகள் மற்றும் நிற்காத இரத்தப்போக்கு:**

சிறிய காயங்களுக்குப் பிறகும் எளிதில் காயம் அல்லது தழும்பு ஏற்படுவது அல்லது அடிக்கடி மூக்கிலிருந்து இரத்தம் வடிவது போன்றவை கல்லீரல் பாதிப்பின் அறிகுறிகளாக இருக்கலாம். சரியாகச் செயல்படாத கல்லீரல், இரத்தம் உறைவதற்கு உதவும் புரதங்களை குறைவாகவே உற்பத்தி செய்கிறது. இதனால் உடலில் எளிதில் இரத்தப்போக்கு ஏற்படலாம். இதனுடன், உங்கள் நகங்களிலும் மாற்றங்களை நீங்கள் கவனிக்கலாம்; அவை வெளிறிய நிறத்திலோ, எளிதில் உடையக்கூடியதாகவோ அல்லது 'ஸ்பூன்' (spoon) வடிவத்திலோ மாறலாம்.

**உள்ளங்கைகளில் தொடர்ந்து காணப்படும் சிவப்பு நிறம்:**

வெப்பம் அல்லது ஒவ்வாமை (allergy) காரணமின்றி உள்ளங்கைகளில் தொடர்ந்து சிவப்பு நிறம் காணப்படுவது சாதாரணமான ஒன்றல்ல. நாள்பட்ட கல்லீரல் நோய்கள் இரத்த ஓட்டத்தைப் பாதித்து, 'பால்மர் எரித்மா' (palmar erythema) எனப்படும் நிலையை உருவாக்கலாம்; இதனால் உள்ளங்கைகள் நிரந்தரமாகச் சிவப்பு நிறத்தில் காணப்படும்.

**தோலில் 'ஸ்பைடர் வெயின்ஸ்' (spider veins):**

முகம், கழுத்து மற்றும் மார்பு போன்ற பகுதிகளில் சிலந்தி வலை போன்ற தோற்றமளிக்கும் மெல்லிய இரத்த நாளங்களுடன் கூடிய சிறிய சிவப்புப் புள்ளிகள் தோன்றும். இவை 'ஸ்பைடர் ஆஞ்சியோமாக்கள்' (spider angiomas) என்று அழைக்கப்படுகின்றன. இவை பொதுவாக கல்லீரல் பாதிப்பால் ஏற்படும் ஹார்மோன் மாற்றங்களுடன் தொடர்புடையவை.

**வயிற்றில் தெரியும் ரத்த நாளங்கள்:**

வயிற்றில் நீல அல்லது பச்சை நிற இரத்த நாளங்கள் தெரிவது ('கேபுட் மெடுசே' caput medusae எனப்படும் நிலை), கல்லீரலுக்குச் செல்லும் இரத்த நாளங்களில் அழுத்தம் அதிகரிப்பதற்கான அறிகுறியாக இருக்கலாம். கல்லீரல் நிலை மோசமடைவதைக் குறிப்பதால், இதை ஒருபோதும் புறக்கணிக்கக்கூடாது.

**சோர்வு, வீக்கம், குழப்பம்:**

நாள்பட்ட சோர்வு, வயிற்று வீக்கம், கால்கள் அல்லது பாதங்களில் நீர் கோர்த்தல், பசியின்மை மற்றும் மனக்குழப்பம் ஆகியவை கல்லீரல் தனது முக்கிய செயல்பாடுகளைச் செய்வதில் சிரமப்படுவதற்கான அறிகுறிகளாகும். சிரோசிஸ் நோய் தீவிரமடையும் போது இந்த அறிகுறிகளும் மோசமடையலாம்.

சிரோசிஸ் நோய் மிக மெதுவாகவே உருவாகிறது. இருப்பினும், நோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதன் மூலம் அதன் தீவிரத்தைக் குறைக்க முடியும்; மேலும் ஏற்படக்கூடிய சிக்கல்களையும் தடுக்கலாம். உடலில் இத்தகைய அறிகுறிகள் மீண்டும் மீண்டும் தென்பட்டால், கூடிய விரைவில் மருத்துவரை அணுகித் தேவையான பரிசோதனைகளைச் செய்துகொள்வது மிகவும் முக்கியம்.




திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், ஜூன் 26– சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, மாவட்ட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், போதைப்பொருள் ஒழிப்பு குறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ள செல்பி பாயின்டில் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நா.திருப்பதி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அக்ஷய் அனில் வாகரே ஆகியோர் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். உடன் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ஜெயகுமாரி, உதவி ஆணையர் (கலால்) வேடியப்பன், முதன்மை கல்வி அலுவலர் புண்ணியகோட்டி, வீரர், வீராங்கனைகள், விளையாட்டு ஆசிரியர்கள், பள்ளி பொறுப்பு ஆசிரியர்கள், விளையாட்டுத்துறை அலுவலர்கள் மற்றும் பலர் உள்ளனர்.

# மேகதாது பிரச்சனை: கூட்டணி கட்சி தலைவர்களை சந்திக்கிறார் விஜய்!



சென்னை, ஜூன். 26–

முதல்வராக விஜய் பொறுப்பேற்ற பின், தன் தலைமையிலான தமிழக வெற்றி கழக அரசுக்கு ஆதரவு அளித்த கூட்டணி கட்சிகளின் தலைவர்களை, அவர்களின் வீடு மற்றும் அலுவலகங்களுக்கு சென்று நன்றி கூறி வாழ்த்து பெற்றார். சிங்கப்பெண்கள் சிறப்பு அதிரடிப் படை, மொழி கொள்கையில் மாநில உரிமைகளை பாதுகாப்பு, மேகதாது அணை விவகாரத்தில் தனி தீர்மானம் நிறைவேற்றம் என, த.வெ.க., அரசின் செயல்பாடுகளை கூட்டணி கட்சிகள் வரவேற்றுள்ளன.

இந்நிலையில், மத்திய அரசுடன் இணக்கம், காவிரி மற்றும் மேகதாது அணை விவகாரம் தொடர்பாக கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் கருத்துகளையும், ஆலோசனைகளையும் கேட்டு செயல்பட முதல்வர் விஜய் விரும்புகிறார்.

அதனால், விரைவில் கூட்டணி கட்சி களின் தலைவர்கள் சந்திப்புக்கு, த.வெ.க., தரப்பில் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

# அமெரிக்காவில் தமிழ் அமைப்பு மாநாடு: அண்ணாமலை சிறப்புரை!




சென்னை, ஜூன். 26–

அமெரிக்காவின் நியூ ஜெர்சியில் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை மற்றும் நியூ ஜெர்சி தமிழ்ப் பேரவையும் இணைந்து பேரவையின் 39 வது தமிழ் விழாவில் வீ தி லீடர்ஸ் அமைப்பின் நிறுவனர் அண்ணாமலை சிறப்புரை ஆற்ற உள்ளார்.

தமிழக மாநில பாஜ தலைவராக இருந்த அண்ணாமலைக்கு இளைஞர் மத்தியில் நல்ல செல்வாக்கும், வரவேற்பும் இருந்தது. சமீபத்தில் அவர் பாஜவில் இருந்து விலகி ‘ வீ தி லீடர்ஸ் ‘ என்ற அமைப்பை துவக்கி உள்ளார். இதற்கும் இளைஞர்கள் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். இதுவரை 18.59 லட்சம் இளைஞர்கள் இந்த அமைப்பில் இணைந்துள்ளனர். இந்த அமைப்பை அரசியல் இயக்கமாக மாற்றப்போவதாக அண்ணாமலை அறிவித்து உள்ளார்.

இத்தகைய சூழ்நிலையில், வட அமெரிக்காவில் உள்ள தமிழ் சங்கங்களை இணைக்கும் ‘‘ வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை(FETNA)’ வும் நியூ ஜெர்சி தமிழ்ப் பேரவையும் இணைந்து பேரவையின் 39 வது தமிழ் விழாவிற்கு ஏற்பாடு செய்துள்ளன.

நியூ ஜெர்சியில் உள்ள நியூஜெர்சி கன்வென்சன் மற்றும் எக்ஸ்போசிசன் மையத்தில் வரும் ஜூலை 2, 3, 4 ஆகிய நாட்களில் இவ்விழா நடக்க உள்ளது.. தமிழகத்தை சேர்ந்த பல்வேறு பிரபலங்கள் இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளனர்.

இந்த நிகழ்ச்சியில் வீ தி லீடர்ஸ் அமைப்பின் நிறுவனரான அண்ணாமலை பங்கேற்று சிறப்புரையாற்ற உள்ளார்.

# ஜூலை 1-ல் அதிமுக மகளிரணி நிர்வாகிகள் கூட்டம்!



சென்னை, ஜூன். 26–

அதிமுக பொதுச்செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:–

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மகளிர் அணியின் செயல்பாடுகள் குறித்தும்; கழக வளர்ச்சிப் பணிகளில் மகளிரின் பங்கு குறித்தும், “கழக மகளிர் அணி மாநில நிர்வாகிகள்; மாவட்ட மகளிர் அணிச் செயலாளர்கள்; கழக அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் மாவட்டங்களைச் சேர்ந்த, மாவட்டக் கழக இணைச் செயலாளர், மாவட்டக் கழக துணைச் செயலாளர்; தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் கழகப் பொதுக்குழு உறுப்பினர்கள், மகளிர் கழக செய்தித் தொடர்பாளர்கள் ஆலோசனை கூட்டம்’’ சென்னை, இராயப்பேட்டை, அவ்வை சண்முகம் சாலையில் உள்ள தலைமைக் கழக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மாளிகையில், வருகின்ற 1.7.2026 – புதன் கிழமை காலை 10 மணியளவில் நடைபெற உள்ளது.

எடப்பாடி பழனிசாமி ஆலோசனை

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், கழகப் பொதுச் செயலாளர், தமிழ் நாடு முன்னாள் முதல்–அமைச்சர் ‘புரட்சித் தமிழர் எடப்பாடி கே. பழனிசாமி பங்கேற்று ஆலோசனை வழங்க உள்ளார்கள். இக்கூட்டத்தில் மூத்த தலைமைக் கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர். ஆகவே, மேற்கண்ட பொறுப்புகளில் பணியாற்றி வரும் மகளிர் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளு மாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# இடைத்தேர்தலில் ஸ்டாலின் போட்டி?



சென்னை, ஜூன். 26–

சட்டசபை தேர்தலில், சென்னை கொளத்தூர் தொகுதியில் தி.மு.க., தலைவர் ஸ்டாலின் தோல்வியடைந்தார்.

இந்நிலையில், முதல்வர் விஜய், திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ., பதவியை ராஜினாமா செய்ததால், அங்கு இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. இது தவிர, அ.தி.மு.க., – எம்.எல்.ஏ.,க்கள் ராஜினாமா செய்ததால், மதுராந்தகம், தாராபுரம், அம்பாசமுத்திரம், பெருந்துறை, விராலிமலை தொகுதிகளும் இடைத்தேர்தலை சந்திக்கின்றன. இதில், திருச்சி கிழக்கு தொகுதியில் ஸ்டாலின் போட்டியிட வேண்டும் என, தி.மு.க.,வின் திருச்சி தெற்கு மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில், தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதற்கிடையே, சட்டசபையில் கவர்னர் உரை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய முதல்வர் விஜய், சட்டசபைக்கு ஸ்டாலின் வர முடியாததை சுட்டிக்காட்டி விமர்சித்தார். இதனால், ஏற்கனவே ஸ்டாலின் தோல்வியால் அதிர்ச்சியில் உள்ள தி.மு.க.,வினர் கோபமடைந்துள்ளனர். இந்நிலையில், புதுக்கோட்டையில் தி.மு.க., நிர்வாகி இல்ல நிகழ்ச்சியில் பங்கேற்ற, தி.மு.க., முன்னாள் அமைச்சர் நேரு பேசுகையில், ‘’சட்டசபையில் முதல்வர் விஜய், ‘அப்பாவை காணோம்’ என்கிறார்; வருவார், எவ்வளவு விரைவாக வர வேண்டுமோ, அவ்வளவு விரைவாக மீண்டும் சட்டசபைக்கு வருவார்; இது உறுதி,’’ என்றார்.

இடைத்தேர்தலில் ஸ்டாலின் போட்டியிடுவது உறுதி என்பதையே, நேருவின் பேச்சு வெளிப்படுத்துவதாக தெரிகிறது.

# திமுக ஆட்சியில் விடப்பட்ட ரூ.284 கோடி டெண்டர் ரத்து!




சென்னை, ஜூன். 26–

முந்தைய திமுக ஆட்சியில், சென்னை மாநகரில் நடைபாதை அமைப்பதற்காக விடப்பட்ட ரூ.284 கோடி டெண்டரை பல்வேறு முறைகேடுகள் கண்டறியப்பட்டதால் சென்னை மாநகராட்சி நிர்வாகம் ரத்து செய்துள்ளது.

திமுக ஆட்சியில் சென்னை மாநகராட்சியில் வெவ்வேறு வார்டுகளில் நடைபாதை அமைப்பதற்கான டெண்டர்கள் விடப்பட்டன. அவை, 35 பேக்கேஜ்களாக பிரித்து ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த மதிப்பு ரூ.284 கோடி.

அடையாறு சாஸ்திரி நகர், பெசன்ட் நகர் போர்த் அவென்யூ, ஜவஹர்லால் நேரு ஸ்டேடியம் அருகே உள்ள ராஜா முத்தையா சாலை, கீழ்ப்பாக்கத்தில் உள்ள பார்னபி சாலை மற்றும் மயிலாப்பூரில் உள்ள டாக்டர் பி.எஸ். சியாசாமி சாலை உள்ளிட்ட முக்கிய சாலைகள் மற்றும் பிற தார் சாலைப் பகுதிகளில் நடைபாதைகள் அமைப்பதற்காக இந்த டெண்டர் விடப்பட்டிருந்தது.

முதல்வர் விஜய் தலைமையிலான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முந்தைய ஆட்சிக்காலத்தில் விடப்பட்ட, தற்போது நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் ஆய்வு செய்யுமாறு சென்னை மாநகராட்சிக்கு உத்தரவிட்டு இருந்தது. ஆய்வில், பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகையை உயர்த்தி நிர்ணயித்தது போன்ற முறைகேடுகள் வெளிப்படையாக தெரியவந்ததை தொடர்ந்து இந்த டெண்டர் ரத்து செய்யப்பட்டுள்ளது.



ஈரோடு கோட்டை பெருமாள் கோவிலில் மழை வேண்டியும், உலக பேரிடர்களிருந்து பாதுகாக்க, நாட்டுக்கு நன்மை பயர்க்க, உலக மக்கள் மன நிம்மதியுடனும் சந்தோஷத்துடன் வாழ ‘‘சக்கரத்தாழ்வார் ஜெயந்தி யாகம்’’ உலக தமிழ் ஜோதிட ஆய்வு கூட்டமைப்பு தலைவர் டாக்டர் ஓம் உலகநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திருக்கோவில் செயல் அலுவலர் சுரேந்தர், சத்குரு அஞ்சலி மாதாஜி, அறங்காவலர் குழு தலைவர் எஸ் கே டி சுப்பிரமணியன், முன்னாள் அறங்காவலர் குழு தலைவர் வைபவ் செல்வன், அறங்காவலர் ராவணன், அம்மன் மாதேஸ், சுந்தர்ராஜன், நகைக்கடை ராஜா, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளராக புதிதாக பொறுப்பேற்றிருக்கும் முன்னாள் மாவட்ட கவுன்சிலர் வேல் குமார் சாமிநாதன் அவர்களுக்கு புதிய பேருந்து நிலையம் பகுதி கழக செயலாளர் வானவில் கனகராஜ் தலைமையில் பகுதிக்கு உட்பட்ட நிர்வாகிகள் அவருக்கு பொன்னாடை போற்றி பணி சிறக்க வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# வேலை வாய்ப்பு

## கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவ நிறுவனத்தில் 27 காலிப்பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: மனநல நிறுவனம், கீழ்ப்பாக்கம், சென்னை

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

பணி அமைப்பு: ஒப்பந்த அடிப்படையில்

மொத்த காலிப்பணியிடங்கள்: 27 (மருத்துவ உளவியலாளர், ஆலோசகர் / பொது உளவியலாளர், மனநல சமூகப் பணியாளர், புள்ளியியலாளர், கணக்காளர் தரவு உள்ளீட்டுப் பணியாளர், மனநல ஆதரவுப் பணியாளர், அலுவலக உதவியாளர்)

பணிபுரியும் இடம்: கீழ்ப்பாக்கம், சென்னை

தொடக்கத் தேதி: 23.06.2026

கடைசித் தேதி: 08.07.2026

விண்ணப்பிக்கும் முறை: நேரடி முறை (Offline)

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://tnhealth.tn.gov.in/

# ஜூலை 1 முதல் பாஸ்போர்ட் கட்டணம் உயர்வு: வெளிநாடு செல்ல திட்டமிட்டோருக்கு கூடுதல் செலவு!




புதுடெல்லி, ஜூன். 26–

பாஸ்போர்ட் பெறவும், புதுப்பிக்கவும் விண்ணப்பிக்கும் கட்டணங்களை மத்திய அரசு உயர்த்தியுள்ளது. திருத்தப்பட்ட புதிய கட்டணங்கள் 2026 ஜூலை 1 முதல் அமலுக்கு வர உள்ளன. வெளியுறவுத்துறை அமைச்சகம், பாஸ்போர்ட் விதிகள், 1980–ல் திருத்தம் செய்து இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. புதிய கட்டணப்படி, 36 பக்கங்கள் கொண்ட சாதாரண புதிய பாஸ்போர்ட் அல்லது புதுப்பிப்பு கட்டணம் ரூ.1,500–ல் இருந்து ரூ.2,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதேபோல், அவசர (Tatkal) சேவைக்கான கட்டணம் ரூ.3,500–ல் இருந்து ரூ.5,000 ஆக உயர்ந்துள்ளது. 60 பக்கங்கள் கொண்ட பாஸ்போர்ட்டிற்கான கட்டணமும் ரூ.2,000–ல் இருந்து ரூ.3,500ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், பாஸ்போர்ட் தொலைந்தது அல்லது சேதமடைந்தால் மறுபதிப்பு பெறுவதற்கான கட்டணங்களிலும் உயர்வு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டண உயர்வு காரணமாக, வெளிநாட்டு கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா நோக்கில் பாஸ்போர்ட் பெற திட்டமிட்டுள்ளவர்கள் ஜூலை 1–க்குப் பிறகு கூடுதல் தொகையை செலுத்த வேண்டியிருக்கும்.

# 12 மாநகராட்சிகளில் தூய்மை பணியை தனியார் மயமாக்கும் டெண்டர் ரத்து!



சென்னை, ஜூன். 26–

12 மாநகராட்சிகளில் தூய்மை பணியை தனியார் மயமாக்கும் டெண்டர் ரத்து செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 12 மாநகராட்சிகளில் தூய்மை பணிகளை தனியார் பங்களிப்புடன் மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகளை அறிய கடந்த 20–ம் தேதி அரசு டெண்டர் கோரியுது. இதுதொடர்பாக தமிழக அரசின் திட்ட மேம்பாடு நிதி (பிடிஜிஎப்) நிறுவனம் ஒப்பந்தப் புள்ளி (டெண்டர் அறிவிக்கையை விளம்பரமாக வெளியிட்டது.

அதில், ஆவடி, ஒசூர். தாம்பரம், வேலூர், கோவை, ஈரோடு. சேலம், திருப்பூர், மதுரை, தூத்துக்குடி, திருச்சி, நெல்லை ஆகிய 12 மாநகராட்சிகளில், பொது–தனியார் கூட்டாண்மை முறையில் (பிபிபி) திடக்கழிவு சேகரிப்பு மற்றும் எடுத்துச் செல்லும் பணிகளுக்கான ஆலோசனை சேவைகளை வழங்கவும், விரிவான சாத்தியக்கூறு அறிக்கையை தயாரிக்கவும், ஆலோசனை வழங்கும் நிறுவனத்தை தேர்வு செய்வதற்கு டெண்டர் கோரப்படுகிறது என்று கூறப்பட்டு இருந்தது.


இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




# தவெகவுடன் மதிமுக? தி.மு..க.வில் இருந்து விலகல்?



சென்னை, ஜூன். 26–

கடந்த 2026 தமிழக சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் இடம்பெற்று இருந்தது. இதில் அக்கட்சிக்கு 4 தொகுதிகள் ஒதுக்கப்பட்ட நிலையில் அவை அனைத்திலும் உதயசூரியன் சின்னத்தில் மதிமுக வேட்பாளர்கள் நின்றனர். ஆரம்பத்தில் இதற்கு மதிமுக தரப்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

### உதயசூரியன் சின்னம்

ஆனால் திமுக கடும் அழுத்தம் கொடுக்கவே வேறு வழியின்றி 3 தொகுதிகள் உதயசூரியன் சின்னத்திலும், ஒரு தொகுதியில் தனி சின்னத்திலும் போட்டியிடலாம் என முடிவெடுக்கப்பட்டது. ஆனால் அந்த முடிவு மீண்டும் மறுபரிசீலனை செய்யப்பட்டு நான்கு தொகுதிகளிலும் உதயசூரியன் சின்னத்தில் மதிமுக வேட்பாளர்கள் நிற்பார்கள் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ அறிவித்தார்.

### திமுக கூட்டணி

இந்த நிலையில் சட்டமன்ற தேர்தலில் இரண்டு தொகுதிகளில் மதிமுக வெற்றி பெற்றது. ஆனால் சட்டமன்ற தேர்தலுக்குப் பிறகு பெரும்பான்மையை நிரூபிக்க ஆதரவு இல்லாமல் தவித்த தமிழக வெற்றிக்கழக அரசுக்கு திமுக கூட்டணியில், தங்களது சின்னத்திலே போட்டியிட்ட பிற அரசியல் கட்சிகள் ஆதரவு தெரிவித்ததோடு மட்டுமல்லாமல் மூன்று கட்சிகள் ( காங்கிரஸ், விசிக, ஐ.யு.எம்.எல்.) அமைச்சரவையிலும் இடம்பெற்றது.

### மதிமுகவில் இருந்து விலகினார் சீர்காழி எம்எல்ஏ



சென்னையில் நடந்த மதிமுக உயர்நிலைக்குழு கூட்டத்துக்கு சீர்காழி எம்எல்ஏ செந்தில்செல்வன் வரவில்லை. தான் மதிமுகவில் இருந்து விலகி விட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

### தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆதரவு

ஆனால் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டதால் மதிமுகவால் த.வெ.க.வுக்கு வெளிப்படையான ஆதரவு தெரிவிக்க முடியவில்லை.

இந்நிலையில் தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறி தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் முனைப்பில் மதிமுக உள்ளதாக பரபரப்பு தகவல் வெளியாகி உள்ளது. இதன்படி வைகோ தலைமையில் இன்று நடைபெற்ற உயர்நிலைக் குழு கூட்டத்தில் கட்சியின் வளர்ச்சி கருதி பல முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என கூறப்பட்டது. இந்த கூட்டத்தில் கூட்டணி நிலைப்பாடு குறித்து உறுப்பினர்களின் கருத்துகள் கேட்கப்பட்டன.

இந்நிலையில் மதிமுக எம்.எல்.ஏ.க்கள் இருவரும் ராஜினாமா செய்ய அந்த கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், இன்று உயர்நிலை குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் நாளை (27.06.2026) நடைபெறும் பொதுக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ஜூன் 27ம் தேதி) பிற்பகல் 3.30 மணிக்கு தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறும் முடிவை வைகோ அறிவிக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

தி.மு.க. கூட்டணியில் இருந்த பிரதான கட்சிகள் வெளியேறிய நிலையில் அடுத்து ம.தி.மு.க.வும் கூட்டணியில் இருந்து வெளியேறுவதாக தகவல்கள் வெளியாகி வரும் செய்திகள் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளன.

# இந்தியாவின் முதல் தனியார் தங்கச்சுரங்கம் ஆந்திராவில் தொடக்கம்!



புதுடெல்லி, ஜூன். 26–

இந்தியாவின் முதல் தனியார் தங்கச்சுரங்கம் ஆந்திராவில் தொடங்கப்பட்டு உள்ளது. ஆண்டுக்கு 2 டன் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

இந்தியா தனது உள்நாட்டுத் தங்கத் தேவையின் பெரும் பகுதியை வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்கிறது. கடந்த 2015 மற்றும் 2021–ம் ஆண்டுகளில் மத்திய அரசு கொண்டு வந்த சுரங்கக் கொள்கை சீர்திருத்தங்கள் மூலமாக தனியார் நிறுவனங்கள், தங்க சுரங்கங்களை அமைக்கலாம்.

அதன்படி சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவில் முதல்முறையாக வணிகரீதியிலான ஒரு பெரிய தனியார் தங்கச்சுரங்கத் திட்டம் ஆந்திரபிரதேசத்தில் தனது உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

கர்னூல் மாவட்டம், துக்கலி மண்டலத்தில் அமைந்துள்ள சுவர்ணகிரி தங்கச் சுரங்கத் திட்டத்தை ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைத்தார். சுமார் ரூ.405 கோடி முதலீட்டில் உருவாக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம். நாட்டின் கனிம வளத்துறையில் ஒரு புதிய தொடக்கமாகக் கருதப்படுகிறது.

கடந்த காலங்களில் மவுரிய பேரரசு காலத்திலேயே தங்கம் வெட்டி எடுக்கப்பட்ட பெருமை இந்த சுவர்ணகிரி பகுதிக்கு உண்டு. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, இப்போது நவீன தொழில்நுட்பத்துடன் இந்தத் தளம் மீண்டும் உயிர் பெற்றுள்ளது.

தற்போது இந்தியாவில் கர்நாடகாவின் 'ஹட்டி' அரசுத் தங்கச் சுரங்கம் மட்டுமே உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்து வரும் நிலையில், அதற்கு மாற்றாக உருவெடுத்துள்ள முதல் பெரிய அளவிலான பாறைகளில் இருந்து நேரடியாக தங்கம் பிரித்தெடுக்கும் தனியார் தளம் இதுவாகும்.

'ஜியோமைசூர் சர்வீசஸ்' மற்றும் 'டெக்கான் கோல்டு மைன்ஸ்' நிறுவனங்கள் இணைந்து இத்திட் டத்தை செயல்படுத்தி உள்ளன.

நடப்பு 2026–27 நிதியாண்டில் முதற்கட்டமாக 400 கிலோ தங்கம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. அடுத்தடுத்த ஆண்டுகளில் இது 900 கிலோவாகவும், விரிவாக்கப் பணிகளுக்குப்பின் ஆண்டுக்கு 2 டன்னாகவும் உயர்த்தப்படும்.

முதலாண்டில் மட்டும் ஆந்திர அரசுக்கு 4 சதவீத ராயல்டி மூலம் ரூ.57 கோடி வருவாய் கிடைக்கும். உற்பத்தி 2 டன்னாக உயரும் போது இந்த வருவாய் ரூ.144 கோடியைத் தாண்டும்.

இந்த தங்கசுரங்கத்தைத் திறந்து வைத்துப் பேசிய முதல்–மந்திரி சந்திரபாபு நாயுடு. "ஆந்திராவை 2047–க்குள் சுவர்ண ஆந்திராவாக' மாற்றுவதே எங்கள் இலக்கு. இங்கு வெட்டி எடுக்கப்படும் தங்கம் வெளிமாநிலங்களுக்குச் செல்லாமல், இங்கேயே ஆபர ணங்களாக மாற்றப்பட வேண்டும். அதற்காக சுவர்ணகிரியில் பிரமாண்டமான 'நகை பூங்கா' ஒன்று அமைக்கப்படும்" என்றார்.

# இமாம் உசேனின் தியாகத்தை போற்றுவோம் - பிரதமர் மோடி மொஹரம் வாழ்த்து!



புதுடெல்லி, ஜூன். 26–

மொஹரம் பண்டிகை தினமான இன்று பிரதமர் மோடி ஹஸ்ரத் இமாம் உசேனின் தியாகத்தை போற்றியுள்ளார்.

அவர் தனது எக்ஸ் பதிவில், "ஹஸ்ரத் இமாம் உசேனின் தியாகம் காலங்கள் கடந்தும் உலகெங்கிலும் உள்ள மக்கள் உண்மையையும் நீதியையும் கடைபிடிக்க உந்துசக்தியாக அமைந்த்துள்ளது.

அவரின் தியாகம் தைரியத்தின் சக்தியையும் உறுதிப்பட்டையும் நினைவுவூட்டுகிறது" என தெரிவித்துள்ளார்.

கர்பாலா போரில் நபிகள் நாயகத்தின் பேரன் இமாம் உசேனின் உயிர்தியாகத்தை நிறைவுகூறும் வகையில் உலகம் முழுவதிலும் மொஹரம் பண்டிகை அனுசரிக்கப்படுகிறது.

இஸ்லாமிய நாள்காட்டியின் முதல் மாதம் மொஹரம் ஆகும். மொஹரம் மாத தொடக்கம் புத்தாண்டை குறிக்கிறது. இது இஸ்லாத்தில் மிகவும் புனிதனான மாதங்களில் ஒன்று.

மொஹரம் உட்பட 4 மாதங்கள் இஸ்லாமிய மரபில் போருக்கு செல்ல தடை செய்யப்பட்ட மாதங்கள் ஆகும். இந்த புனித மாதத்தின்போது கடவுளை வணங்குதல், பிரார்த்தனை உள்ளிட்டவற்றிலேயே இஸ்லாமியர்கள் அதிகம் ஈடுபட வேண்டும் என்பது மரபு.

மொஹரம் மாத தொடக்கத்தின் முதல் 10 நாட்கள் இமாம் உசேன் மற்றும் அவருடன் உயிர் தியாம் செய்தோரின் தியாகத்தை நினைவிகூறும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. ஷியா முஸ்லிம்களிடையே மொஹரம் பண்டிகை அதிக முக்கியம் வாய்ந்ததாக உள்ளது .

# சென்னையில் ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகள் மாநாடு: முதல்வர் விஜய் தலைமையில் முக்கிய ஆலோசனை!




சென்னை, ஜூன் 26–

தமிழக அரசின் ஆண்டு ஐஏஎஸ், ஐபிஎஸ் மற்றும் ஐஎஃப்எஸ் அதிகாரிகள் மாநாடு ஜூன் 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெறுகிறது. முதலமைச்சர் விஜய் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில், மாநில நிர்வாகம், சட்டம்–ஒழுங்கு, முதலீடுகள், மக்கள் நலத் திட்டங்களின் செயல்பாடு, மாவட்ட நிர்வாகத்தின் செயல்திறன் மற்றும் அரசு சேவைகளை விரைவுபடுத்துவது குறித்து விரிவான ஆலோசனைகள் நடைபெற உள்ளன. அனைத்து துறை செயலாளர்கள், மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை உயரதிகாரிகள் மற்றும் வனத்துறை அதிகாரிகள் இதில் பங்கேற்கின்றனர். அரசின் அடுத்தகட்ட நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்கு இந்த மாநாட்டில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அமோனியா வாயு கசிவு: பலி எண்ணிக்கை 14-ஆக உயர்வு...!



திருவள்ளூர், ஜூன். 26–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம் கன்னிகைப்பேர் கிராமத்தில் செயல்பட்டு வந்த 'புனித பீட்டர் பால்' என்கிற கடல் உணவு பொருட்களை பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் தனியார் நிறுவனத்தில் கடந்த 21–ந்தேதி அமோனியா வாயு கசிவு ஏற்பட்டது.

இந்த விபத்தில் அங்கு பணியாற்றி வந்த வடமாநில பெண் தொழிலாளர்கள் உள்பட 74 பேர் மயக்கமடைந்தனர். இதையடுத்து அவர்கள் 2 அரசு ஆஸ்பத்திரிகள் மற்றும் 2 தனியார் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வந்தனர்.

நேற்று முன்தினம் வரை 10 பெண் தொழிலாளர்கள் உயிரிழந்த நிலையில், நேற்று சென்னை ஸ்டான்லி அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பலனின்றி ஒடிசா மாநிலத்தை சேர்ந்த ரீட்டா ஜுஜிங்கா, பிங்கி ஜுஜிங்கா மற்றும் ராஜீவ்காந்தி அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த சுமித்ரா ஜிங்கா ஆகிய 3 பெண் தொழிலாளர்கள் உயிரிழந்தனர். இதன்மூலம் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் ராஜீவ்காந்தி மருத்துவமனையில் ஐசியூ–வில் சிகிச்சை பெற்று வந்த ஜார்க்கண்டை சேர்ந்த பிரித்தி தேவி (29) உயிரிழந்தார். இதன்மூலம் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது.

# ஆலயத்தில் 'நவீன தீண்டாமை'




'தீண்டாமை ஒரு பெருங்குற்றம்' அது தீய செயல்.அதை அறவே ஒழிக்க வேண்டும் என்ற குரலை இன்றும் எப்பொழுதும் கேட்டுக் கொண்டே இருக்கின்றோம். "All are equal before eyes of law" என்பதை போலவே " All are equal before eyes of God" சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பது எவ்வளவு உண்மையோ அதே அளவு தெய்வத்தின் முன் அனைவரும் சமம். இதற்கு இந்திய அரசியல் சாசனம் பொது மக்களின் அடிப்படை உரிமைகளை முழுமையாக பாதுகாக்க வழிவகைகள் செய்கிறது. இந்திய அரசாங்கத்தின் ஆட்சி எல்லைக்குள் உள்ள உள்ளூர் அதிகார மற்றும் பிற அதிகார அமைப்புக்கள் அடிப்படை உரிமைகளுடன் முரண்படும் விதிகளோ, சட்டங்களோ இயற்றினால் அது செல்லா நிலையாகும் என்று அரசியல் சாசனம் 13 வது ஷரத்து கூறுகிறது. 13(2) அடிப்படை உரிமைகளை மீறுவதாகவோ, பறிப்பதாகவோ சட்டங்களோ, விதிகளோ இயற்ற கூடாது என்றும் அவ்வாறு இயற்றினால் அது அரசியல் அமைப்பு சாசனம் படி செல்லாத தாக்கும். சமத்துவ உரிமை பற்றி 14–18 வரை கூறுகிறது. குறிப்பாக ஷரத்து 17 தீண்டாமை ஒரு பாபச் செயல். அதை ஒழித்தே தீர வேண்டும் என்றும் Untouchability is a sin . It has to eradicate. It is punishable and it for–bids it's practice in any form. என்று கூறுகிறது. தீண்டாமை எந்த விதத்திலும் எந்த உருவத்திலும் இருக்க கூடாது அதை அனுமதிக்க முடியாது என்றும் கூறுகிறது. இப்பொழுது தமிழ் நாடு ஹிந்து அறநிலையத்துறை சட்டம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம். அதன் ஒரு பகுதியாக The temple entry Authorization and indemnity act 1939 ல் உள்ள provision குறைபாடு உடையதாக போதுமானதாக இல்லாததால் புதிய ஷரத்துகள் சேர்க்கப்பட்டு முழு வடிவம் பெற்று Tamil Nadu Temple entry Authorization act 1947 என்ற சட்டம் அமலுக்கு வந்தது. அதன்படி sec–tion 3 and 4 – இந்திய மக்கள் அனைவரும் எந்த பாகுபாடும் இன்றி வழிபடலாம் என்றும் ஆலய தர்மகர்த்தாக்கள் ஆலயத்தை நிர்வகிக்க விதிகளை வகுக்கலாம் என்றும் அந்த விதிகள் ஜாதிய ,பிரிவுகள் மற்றும் எந்த விதத்திலும் பாகுபாடு உடையதாக, வேறுபடுத்தக் கூடியதாகவோ இருக்க கூடாது என்று கூறுகிறது. மேலும் குறிப்பாக Rules 9 No Executive authority is entitled to introduce innovations concerning the time, place or mode of worship in the the temple which might prejudicially affect the rights and facilities of the worshippers. இங்கே பக்தர்களின் உரிமைகளை பாதிக்கக்கூடிய, பாகுபடுத்த கூடிய எந்தவிதமான புதிய உக்தியை வழிமுறைகளை அறிமுகம் செய்யக் கூடாது என்று கூறுகிறது. இதற்கு வழுவூட்டக் கூடியதாக தமிழ் நாடு ஹிந்து அறநிலையத்துறை சட்டம் section 57:– power to fix the fees for services etc,and to determine their apportionment என்று கூறப்பட்டுள்ளது. அப்படியென்றால் தேவஸ்தானம் தரிசனத்திற்கு பணம் பெற்றுக் கொண்டு டிக்கெட் வழங்கலாமா என்றால் கூடாது என்றே கூற வேண்டும். ஏனென்றால் இந்த சட்டப் பிரிவு ஆலயத்தின் சேவைகளை அடிப்படையாகக் கொண்டு டிக்கெட் வழங்கலாம். அப்படியென்றால் தரிசனத்திற்கு பணம் பெற்றுக் கொண்டு பக்தர்களை அனுமதிப்பது என்பது சேவையின் கீழ் வருமா என்றால் வராது என்றே கூற வேண்டும் . சேவை என்பது அர்ச்சனை, அலங்காரம்,உற்சவத்திற்கு உரிய பொருட்கள் வழங்குவது, வஸ்திரம், மாலை சாத்த, இன்ன பிற சேவைகள் தொடர்பானது. அதை செய்யக் கூடிய மிராஸி அர்ச்சகர்களுக்கு சட்டப்படி வசூலித்த குறிப்பிட்ட விகிதாச்சார அடிப்படையில் பணத்தை அவர்களின் சேவைக்காக கொடுத்தல் என்பதே. இப்பொழுது தலைப்புக்கு வருவோம். அன்றைய ஆலய நிர்வாகத்தில் ஜாதி, பிரிவு போன்ற எந்த விதமான பாகுபாடுகளின் அடிப்படையில் பக்தர்களின் தரிசனம் இருக்க கூடாது என்பதற்காக ஆலய நுழைவு பாதுகாப்பு சட்டமும் அதன் விதிமு றைகளும் வகுக்கப்பட்டது. சுதந்திரத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய காலங்களில் ஹிந்து ஆலயங்களில் தரிசனத்திற்காக சட்டப்படியும் தர்ம படியும் பக்தர்களை பாகுபடுத்தி பார்க்காமல், அவர்களை பிரிக்காமல் எல்லோரும் தரிசனம் செய்து வந்தனர். அதற்கு உதாரணம் தரிசன டிக்கெட் அறிமுகம் என்பது 1950 க்கு பின்னர் வந்ததாகவே ஆலய கணக்கு பதிவேட்டில் உள்ளது. ஆதலால் தரிசனத்திற்கு என்று பணம் கொடுத்து டிக்கெட் பெற்று தரிசனம் செய்தல் என்பது ஆலயங்களில் முற்கால மரபு பழக்க வழக்கங்களில் இல்லை.இது பிற்காலத்தில் ஏற்படுத்த பட்ட ஒரு மோசமான நடைமுறையே. இந்த நடைமுறையை பெரும்பான்மையான விளிம்பு நிலை மக்கள் வெறுக்கிறார்கள். ஆலயத்தை பராமரிப்பதற்கு பணம் தேவை யென்றால் கட்டண தரிசனம் டிக்கெட் மூலமாக தான் பெற வேண்டும் என்று அவசியமில்லை. ஆலயத்திற்கு என்று சொத்துக்கள் நிலபுலன்கள் உள்ளது அவற்றிலிருந்து வரும் வருவாய் சேவைக்காக வசூல் செய்யப்படும் வருவாய் இனங்கள், உண்டியல்கள்,நன்கொடை போன்ற வருவாய் மூலங்களை வைத்தே கோவிலை பராமரிக்க முடியும். அதற்காக பணத்தால் பக்தர்களை பாகுபடுத்தி பார்ப்பதை பொது ஜனங்களும் விரும்ப வில்லை. சட்டமும் அரசியலமைப்பு சாசனமும் அனுமதிக்க வில்லை. இதன் தொடர்ச்சியாகவே பின்னாளில் விஐபி தரிசனம் என்ற பாகுபாடு ஏற்பட்டது. ஆனால் protocol VIP என்ற ஒரு சிறப்பு சலுகை என்பது அவர்களுக்கு வீடு, பாதுகாவலர்கள், உதவியாளர்கள் வழங்குவது மட்டுமே மத்திய மாநில அரசுகளின் கடமை. விமான நிலையத்திற்கு அவசர அழைப்பின் பேரில் விரைவாக செல்லவும், Vip களுக்காக ரோட்டை block செய்வது பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதை உயர் நீதிமன்றம்,உச்ச நீதிமன்றமும் விரும்பவில்லை என்பதை தங்களுடைய பொது நல வழக்குகளின் தீர்ப்புகளில் சுட்டி காட்டியுள்ளது. இருக்கைகள் ஒதுக்கீடு செய்வதற்கும் மட்டுமே அந்த சிறப்பு சலுகையை பயன் படுத்த வேண்டும். ஆலயங்களில் சிறப்பு தரிசனம் என்பது சொல்லப் பட வில்லை. நீதிமன்றங்கள் வழக்குகளில் VIP சிறப்பு தரிசனம் வரிசையை தடை செய்துள்ளது. தமிழ் நாடு உயர் நீதிமன்றமும் சிறப்பு தரிசனத்தை நிறுத்த வேண்டும் என்று பரிந்துறை செய்துள்ளது. Abhaysinh Vs union of India. முடியாட்சி எனும் மன்னர் ஆட்சி காலத்தில் கூட அரசர்கள் தங்களை தெய்வத்தின் முன் தங்களை பெரிய அதிகாரம் படைத்தவர்களாக முன்னிறுத்தி கொள்ளாதவர்கள் பலர் இருந்தனர். இன்றும் பல ஆலயங்களில் அவர்களின் உருவங்கள் பக்தர்களின் பாதங்களில் படுமாறு தரையில் வடித்திருந்தார்கள். இறைவனின் முன் தான் பெரியவனில்லை என்பதை உணர்ந்தார்கள். ஆனால் சுதந்திர பாரதத்தில் ஜாதிய பாகுபாடுகள் சட்டப்படி நீக்கப்பட்டிருந்தாலும் அது இன்றைய நவநாகரீக வடிவில் அதிகாரம் பணம் , செல்வாக்கு எனும் அடிப்படையில் தங்க சிம்மாசனத்தில் அமர்ந்து உலா வந்து கொண்டு தான் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. "கைப் புண்ணிற்கு கண்ணாடி எதற்கு என்பார்கள்" புராண காலங்களில் பல நீதிக் கதைகளும், பக்தி இலக்கிய காலங்களில் இருந்து நாம் உதாரணங்களை கூற முடியும். சைவ நாயன்மார்கள் வரலாறும் புலையர் ஆதிசங்கரரிடம் என்னை விலகச் சொல்கிறாயா? ஆன்மாவை விலகச் சொல்கிறாயா? என்கிற சம்வாதம், கடோபநிஷதில் யமன்,நிஷிகேதன் வாதம், மெய் கண்டாரிடம் தன்னை மாணவனாக இனைத்துக் கொண்ட அருள் நந்தி சிவம் வரலாறு, "பட்ட கட்டையில் ஏகுது பார் பகற் குருடு" என்று உமாபதி சிவத்திடம் சொல்கிற மறைஞான சம்பந்தர், உமாபதி சிவம்–பெற்றான் சாம்பன் வாழ்க்கை வரலாறு, பல நாயன்மார்கள் வரலாறு. இது போக சுதந்திர இந்தியாவிற்கு முன் அண்ணல் காந்தியடிகள் வழிநடத்த திரு கக்கன் மற்றும் வைத்திய நாத ஐயர் ஹரிஜனங்களின் ஆலய வழிபாட்டு உரிமைக்காக போராடிய ஆலய நுழைவு போராட்டம் வரை உதாரணங்களாகும். அது பக்தர்களாகிய மக்களுக்கு நன்றாகவே தெரியும். இந்த பாகுபாடு வேறு ஒரு வடிவத்தில் சமூகத்தில் தொடர்ந்து கொண்டே வருகிறது. காலம் மாறினாலும் காட்சிகள் மாறவில்லை. அதற்கு ஆதாரம் பத்திரிகை செய்திகளும் தொலைக்காட்சி செய்திகளும், சோஷியல் மீடியாவின் வீடியோக்களுமே சாட்சிகள். இந்த விஐபி எனும் மன அகங்காரத்தை அனுபவிக்காத துறை என்ற விதிவிலக்கான துறைகள் எதுவுமே இல்லை என்றே கூறலாம். ஆலயத்தில் டிக்கெட் தரிசனமுறைக்கே ஹிந்து அறநிலையத்துறை சட்டத்தில் இடம் இல்லை எனும் பொழுது VIP protocol என்று சொல்லிக் கொண்டு தரிசனம் செய்ய சட்டம் அனுமதிக்கிறதா? என்ற கேள்வி எழுகிறது. Vip protocol என்பது மற்றைய அரசாங்கத் துறைகளில் சட்டம் அனுமதிக்கிறது அது ஆலயத்திற்கு பொருந்துமா? அதற்கு தமிழ் நாடு ஹிந்து அறநிலையத்துறை சட்டத்தில் pro–visions உள்ளதா? நானறிந்த வரை பக்தர்களை பணத்தால் பிரித்து பாகுபடுத்தும் கட்டண தரிசனம் செய்யும் system முறைக்கே சட்டப்படி இடம் இல்லை எனும் பொழுது VIP தரிசனத்திற்கு இடம் இருக்குமா? அது தனது அதிகாரத்தை செலுத்த கூடிய இடமாக இருக்க கூடாது என்பதை உணர்தலே பக்தி. இதில் கோவிலுக்கு வரும் vip களை நல்ல கூட்டம் அதிகம் இருக்கும் வெள்ளி,சனி, ஞாயிறு போன்ற வார இறுதி நாட்களில் கோவிலின் வாசலிற்கு ஈஓ, or சூப்பிரண்டு உடன் ஓரிரு அர்ச்சகர்கள் சென்று அவர்களை அழைத்து வந்து தரிசனம் செய்வித்து மாலை வஸ்திர மரியாதை செய்து வாசல் வரை வழியனுப்புவது எந்த சட்டத்திலும் எழுதப்படாத விதி. இதையே விதியே என்று ஆலய சிப்பந்திகளும் மரியாதை நிமித்தமாக வேண்டா வெறுப்பாக செய்து முடிப்பார்கள். இதில் வரும் vip கள் தான் சொன்ன நேரத்துக்கு வராமல் இரண்டு மணிநேரம் தாமதமாக வருவார்கள். இதில் இருக்கும் வேலைப்பளுவிற்கு மத்தியில் ஆலய அதிகாரிகள் ஊழியர்கள் காத்திருப்போடு நிறுத்தாமல் இறைவனையும் காக்க செய்வார்கள். இறைவனை காக்க செய்வார்களா? என்று ஆச்சரியப் படாதீர்கள். காரணத்தை விளக்குகிறேன். அபிஷேக, அலங்கார, தீபாராதனை, திரை போடும் ,நடை சாத்தும் நேரத்தில், இவர்கள் வருவதாக சொல்லி வராமல் இருப்பதால் சிப்பந்திகளுடன் இவர்களுக்காக இறைவனும் சேர்ந்து காத்திருப்பார். இறைவனுக்காக சாதாரண பக்தர்கள் காத்திருப்பதை பார்த்திருப்போம். ஆனால் ஆசாமிக்காக சாமி காத்திருப்பதை பார்த்திருக்கிறீர்களா? இதில் வருபவர்களில் சிலர் இறைவனுக்காக பூஜை பொருட்கள் எதுவும் எடுத்து வராமல் அடுத்தவர் பிரார்த்தனை க்காக சாற்றிய மாலை, பூக்களை இவர்கள் வாங்கிச் செல்வது இன்னும் வேதனையானது. இதில் இவர்களுக்கு அணிவித்த மாலையை இவர்கள் கைகளில் ஏந்தி வருவதைக் கூட பாரமாக நினைத்து தங்களது உதவியாளர்கள் தாங்கி வருவதை பெருமையாக நினைப்பவர்களும் பார்க்கலாம். இவர்கள் தங்களுடைய பக்தியை தாண்டி அவர்களுடைய ஆளுமையை காட்டி மனதில் பூரித்து புளகாங்கிதம் அடைந்து கொள்வார்கள். பக்தி என்பது எளிமையாலும், நேர்மையாலும், தியாகத்தாலும், உள்ள உணர்வினாலும் அடைய வேண்டிய ஒன்று என்று இவர்களுக்கு புரிய வைக்க இறைவனை தவிர யாரால் உணர்த்த முடியும்? எல்லாம் அவன் திருவிளையாடல்.(Question of fact and law) இப்படி செய்வது சரியா என்பதை மக்களிடமே விட்டு விடுகிறேன். " சைவாக மத்தில் " சுமனஸ்ச சாந்தஸ்ச பாத ப்ரக்ஷாலனம் க்ருத்வா.... ஆலயந்து ப்ரவேசயேது" என்று சிவ பக்தர்களுக்கு ஒரு ஒழுங்கு முறையை சிவபெருமான் கூறுகிறார் . அதன் அர்த்தம் என்னவென்றால் நல்ல மனதுடையவனாக சாந்தமுடையவனாக பாதங்களை சுத்தம் செய்து சதாசிவத்தை தியானம் செய்து கொண்டே ( நமச்சிவாய) உச்சரித்து கொண்டே ஆலயத்தில் நுழைந்து தரிசனம் செய்ய வேண்டும் என்று கூறுகிறது. ஆலய வழிபாடு என்பதே மனிதனின் அகங்காரத்தை பலிபீடத்தில் இறக்கி விட்டு தூய ஆன்மாவுடன் இறைவனை மனக் கண்ணில் உணர்ந்து அதை இறை அனுபவமாக அனுபவித்தல், பிறர் துயருக்கு இறங்கி உதவி செய்து கெட்ட கர்மாவை நீக்கி நல்ல கர்மாவை செய்தல், அதன் பின் உடலால் உணர்வால் இறைவனின் திருப்பாதம் களை அடைதலே முக்தி எனும் உயரிய சித்தாந்தமே ஆலய வழிபாட்டின் பொருள். அதன் உண்மை நோக்கத்தை நீர்த்து போகச் செய்கிறார்கள். அந்த நோக்கம் அழிந்தால் வழிபாட்டின் மீது நம்பிக்கை அழியும். அந்த சித்தாந்தத்தின் மீது நம்பிக்கை அழிந்தால் ஒழுக்கம் தவறும். அப்படிப்பட்ட தலைமுறை தவறுக்கு அஞ்சாது. மன சாட்சிக்கு பயப்படாது. அப்படிப்பட்ட சமூகம் குற்றவாளிகளை ஊக்குவிக்கும். பழி பாவத்திற்கு அஞ்சாத ஒரு சமூகத்தை உருவாக்கிய பாவம் நமக்கு வேண்டாம் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். ஆலயத்தில் பொது மக்களுக்கு நடக்கும் பாகுபாட்டை நீக்க அரசு நிர்வாகம் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்ற பக்தர்களின் எதிர்பார்ப்பு நியாயமானதே. "எல்லோரும் இன்புற்றிருக்க வேறொன்றும் அறியேன் பராபரமே". "ஊருக்கு உழைப்பதே யோகம்". – பாரதி. எனக்கு அவனருளாலே அவன் தாள் வணங்கி என்ற வாசகம் தான் நினைவிற்கு வருகிறது . நன்றி.

இப்படிக்கு
**ஆதி சைவன் எஸ். சங்கரன்**
வழக்கறிஞர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020